(4) அறிக்கை அளித்தல்.

துணை வினாவிற்கு அளித்த விடைக்கான திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15-2-1982 ஆம் தேதியன்று 201 ஆம் எண் வினாவிற்குக் கீழ் எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப்பெற்ற விடைக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவை விதி 107-ன் கீழ் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, 15-2-1982 ஆம் தேதியன்று சட்டமன்றப்பேரவை வினா எண் 10844 (புதிய வினா எண் 201) விடை அளிக்கப்பட்டபோது, சட்டமன்ற உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் கீழ்க்கண்ட துணை வினா ஒன்று எழுப்பினார். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைப்பதற்கான ஒரு செயற் குறிப்பு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டதின் பேரில் 4-2-1982 ஆம் தேதி செய்தித்தாளில் இந்தத் திட்டத்திற்கு ரூ.2.34 கோடி மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும், இந்தச் செலவில் மத்திய அரசு 50 சதவிகிதமும், மாநில அரசு 50 சதவிகிதமும் ஏற்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்ததென்றும் உறுப்பினர் குறிப்பிட்டு அப்படி மாநில அரசும் மத்திய அரசும் செய்கின்ற நேரத்தில் ஆளுக்குப் பாதி என்கின்ற இந்தத் திட்டம் அமைய வேண்டுமென்பது உண்மையா என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் அளிக்கையில் "இந்தச் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதையும் பார்த்த பிறகு அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும் என்று கூறினேன்.

ஆனால் இந்தச்செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் என்று முதலில் கருதி விண்ணப்பத்தை நாம் போட்டிருக்கிறோம். ஆனால் இத்திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட முறை பிரகாரம் இச்செலவினை மத்திய அரசும் மாநில அரசும் பகிர்ந்து ஏற்கும். அவர்கள் என்ன நிபந்தனைகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை அந்தக் கடிதம் முழுவதும் பார்த்த பிறகுதான் அதற்கேற்றபடி நாம் நடவடிக்கை எடுக்க இயலும்.

இத்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்